V-4.0

ஹிராநந்தனி ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்

Hiranandani Financial Services

பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்கார்பியோ ஹவுஸ், சென்ட்ரல் அவென்யூ, ஹிராநந்தனி பிசினஸ் பார்க், பவாய், மும்பை – 400076
கார்ப்பொரேட் அலுவலகம்: 9வது தளம், சிக்மா டெக்னாலஜி ஸ்டிரீட், ஹிராநந்தனி கார்டன்ஸ், பவாய், மும்பை - 400076
மின்னஞ்சல்: wecare@hfs.in | இணையதளம்: www.hfs.in | சிஐஎன்: U65999MH2017PTC291060

மிக முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகள்

திட்டம்	விண்ணப்ப ஐடி (எல்ஓஎஸ் ஐடி)		கடன் தொகை	
☐ பிணையுடன் வணிக கடன்				

விண்ணப்பதாரர் பெயர் - சிகேஒய்சி எண் -	இணை-விண்ணப்பதாரர் பெயர் - சிகேஒய்சி எண் -	இணை-விண்ணப்பதாரர் பெயர் - சிகேஒய்சி எண் -

உறுதிமொழி

விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் தகவல் அனைத்தும் உண்மையானது, சரியானது, முழுமையானது என நான்/நாங்கள் அறிவிக்கிறோம் மற்றும் எனக்கு/எங்களுக்கு ஹெச்எப்எஸ் வழங்க முடிவுச் செய்யும் எந்தவொரு கடனுக்கும் அவை அடித்தளமாக இருக்கும். எனக்கு/எங்களுக்கு எதிராக திவால் நடவடிக்கைகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை அதே போல் நான்/நாங்கள் திவாலானவராக தீர்ப்பளிக்கப்படவில்லை என்று நான்/நாங்கள் உறுதிச் செய்கிறோம் மற்றும் கடன் ஆவணங்களை நான்/நாங்கள் படித்து மற்றும் அதிலுள்ள பொருளடக்கத்தை புரிந்துக் கொண்டோம் என்றும் உறுதிச் செய்கிறேன். செயலாக்க கட்டணம் திருப்பித் தரப்படாது என்பதும் என்னால்/எங்களால் புரிந்துக் கொள்ளப்பட்டது.

நிலையான வட்டி விகித தெரிவு அதேப் போல் மாறும் வட்டி விகித தெரிவு கீழ் ஹெச்எப்எஸ் கடன்களை வழங்குகிறது என்பது எனக்கு/எங்களுக்கு தெரியும். ஹெச்எப்எஸ் அத்தகைய மேற்குறிப்புகளை எடுத்து, தான் அவசியம் என கருதுவதன்படி இந்த விண்ணப்பம் சம்பந்தமாக தேவையான விசாரணைகளை செய்யும் என்பதற்கு நான்/நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். எனது/எங்களது தொழில்/வேலையில் ஏதாவது மாற்றங்கள் இருந்தால் அது சம்பந்தமாக ஹெச்எப்எஸ்-க்கு தெரிவிக்கவும் மற்றும் மேற்கொண்டு தேவையான தகவல் எதையும் வழங்கவும் நான்/நாங்கள் உறுதியளிக்கிறோம். மேலும் விண்ணப்பப் படிவம்/தொடர்புள்ள ஆவணங்களில் என்னால்/எங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவலை எனக்கு/எங்களுக்கு முன்னறிவிப்பு இன்றி, ஹெச்எப்எஸ்-ல் இருந்து பெறப்பட்ட கடன்கள் தொடர்பாக வேறு கிளைகள், துணை நிறுவனங்கள், சார்பு நிறுவனங்கள், கிரெடிட் அமைப்புகள், தரநிலை முகமைகள், சேவை வழங்குபவர்கள், வங்கி/நிதி நிறுவனங்கள், அரசாங்க/ஒழுங்குமுறை ஆணையங்கள் அல்லது கேஒய்சி தகவல் சரிபார்ப்புக்காக மூன்றாவது தரப்புகளுக்கு, ஆதார் சட்டம் 2016 அல்லது அவ்வப்போது திருத்தப்படுவதன்படி யுஐடிஏஐ-ல் ஆதார் உறுதிச் செய்ய, கிரெடிட் அபாய பகுப்பாய்வு அல்லது ஹெச்எப்எஸ் சரியானது என கருதும் இதர தொடர்புள்ள நோக்கத்துக்காக வெளிப்படுத்த இதன் மூலம் நான்/நாங்கள் ஹெச்எப்எஸ்-க்கு அதிகாரமளித்து சம்மதிக்கிறோம்.

நான்/நாங்கள் தனியுரிமை முன்னுரிமை மற்றும் ஒப்பந்த உறவை விடுவிக்கிறோம் மற்றும் அவ்வாறான வெளிப்படுத்தல் எந்தவொரு சட்டம், அமலில் உள்ள சட்ட ஒழுங்குமுறை மீறல் கிடையாது. இந்த விண்ணப்பத்தை பரிசீலிக்க எந்தவொரு ஆதாரம்/நபரிடம் இருந்தும் தகவலை ஹெச்எப்எஸ் கோரும்/பெறும். மேலும், இந்த விண்ணப்பத்தை செய்யும் சமயத்தில் அமலில் உள்ள ஹெச்எப்எஸ் விதிமுறைகளால் எனது/எங்களது கடன் நிர்வகிக்கப்படும் மற்றும் அது எதிர்காலத்தில் ஹெச்எப்எஸ் தனிமுடிவின்படி மாற்றப்படலாம் என்பதற்கும் நான்/நாங்கள் ஒப்புக் கொள்கிறோம் மற்றும் எனது/எங்களது விண்ணப்பத்தை காரணங்கள் எதுவும் கூறாமல் நிராகரிக்கும் உரிமையும் ஹெச்எப்எஸ்-க்கு உள்ளது. எனக்கு/எங்களுக்கு ________________________மொழி தெரியும் மற்றும் நன்கு புரிந்துக் கொள்வோம் என்பதை நான்/நாங்கள் இதன்மூலம் உறுதிச் செய்கிறோம் மற்றும் எதிர்காலத்தில் அனைத்து தகவல் தொடர்புகளையும் கடன் ஒப்பந்தத்தின் ஒரு நகல் உள்பட மட்டுமின்றி அதன் இணைப்புகள், அறிவிப்புகள் மற்றும் இதர சம்பந்தப்பட்ட கடன் ஆவணங்களை எனது உசிதமான மொழியில் அனுப்பி வைக்க அல்லது எனக்கு விவரிக்கப்பட நான் விரும்புகிறேன்.

உங்களுடன் உள்ள எங்கள் உறவுக்கு பொருந்தும் வரம்பு வரை, எனது/எங்களது தனிப்பட்ட தகவல் பின்கூறப்பட்ட நோக்கங்களுக்காக பகிரப்படலாம்:- (ஏ) பொருந்தும் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, இதில் தீவிரவாத எதிர்ப்பு, கேஒய்சி, பண-மோசடி எதிர்ப்பு மற்றும் வரிக்காக தெரிவிக்கும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளும் உட்படும்; (பி) இந்த கடன் விண்ணப்பம் சம்பந்தமாக அவசியமானது என கருதக்கூடிய அத்தகைய குறிப்புகளை எடுத்து அதற்கான விசாரணைகளை செய்யவும் சட்ட செயலாக்கத்துக்கு இணங்குவதற்கு, பொதுமக்கள், ஒழுங்குமுறை அல்லது அரசாங்க ஆணையங்களில் (நீங்கள் வசிக்கும் நாட்டுக்கு வெளியே உள்ள ஆணையங்கள் உள்பட) இருந்து வரும் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க, மற்றும் தீர்வுகளை தேட எங்களை அனுமதித்து மற்றும் சேதத்தை குறைப்பதற்கு; (சி) தரவு பகுப்பாய்வு, தணிக்கைகள், புதிய திட்டங்கள் மற்றும் சேவைகளை உருவாக்குவது மற்றும் மேம்படுத்துவது போன்ற உட்புற வணிக செயலாக்கங்களை (பரிவர்த்தனைகளுக்கு உதவுவது) மேற்கொள்ள வகைச் செய்ய நியமிக்கப்பட்டு அவுட்சோர்சிங் முறையில் செயல்படும் எங்களது சேவை வழங்குநர்கள் உள்பட எங்களது கூட்டாளிகள்/சார்பு/குழும நிறுவனங்கள் எவற்றுக்காவது; (டி) உங்களுக்கு பொருத்தமான திட்டங்கள் மற்றும் சேவைகளை எங்களது கூட்டாளிகள்/சார்பு/குழும நிறுவனங்கள் ஏதாவது வழங்க வகை செய்வதற்கு; உங்கள் தனிப்பட்ட தகவல் சேகரிக்க, பயன்படுத்த, செயலாக்க மற்றும் பகிர்வதற்கு நீங்கள் சம்மதிக்காமல் இருக்க (அல்லது எழுத்துப்பூர்வமான அறிவிப்பு மூலம் எந்தநேரத்திலும் விலக்கிக் கொள்ளும்) உரிமை உங்களுக்கு உள்ளது. உங்கள் சம்மதத்தை நீங்கள் வழங்காமல் (அல்லது விலக்கிக் கொள்வதை) தேர்வுச் செய்தால், குறிப்பிட்ட சில திட்டங்கள் மற்றும் சேவைகளை எங்களால் உங்களுக்கு வழங்க முடியாது.

கடனுக்கான உங்களின் விண்ணப்பம் பெறப்பட்டதும், உங்கள் கடனுக்கு தானாகவே ஒப்புதல் கிடைத்து விட்டதாகாது. விண்ணப்பத்துடன் சேர்த்து சேகரிக்கப்பட்டவை தவிர்த்து வேறு கூடுதல் ஆவணங்களையும் ஹெச்எப்எஸ் கோரலாம்.

நான்/நாங்கள் மேற்கொண்டு பின்கூறப்பட்டுள்ளதற்கு சம்மதிக்கிறோம்/உறுதிச் செய்கிறோம்: ஏ. இந்த கடன் விண்ணப்பத்துடன் சேர்த்து அல்லது அது சம்பந்தமாக ஹெச்எப்எஸ் பிரதிநிதி/ஊழியர் பணமாகவோ அல்லது பொருளாகவோ எதையும் பெறமாட்டார். பி. ஹெச்எப்எஸ் அல்லது அதன் பிரதிநிதிகள் யாரும் எனக்கு/எங்களுக்கு தள்ளுபடி அல்லது இலவச பரிசு அல்லது இதர வாக்குறுதி எதையும் கொடுக்கவில்லை. சி. முழுமையற்ற/குளறுபடி உள்ள விண்ணப்பப் படிவத்தை ஹெச்எப்எஸ் பரிசீலிக்காது, அதனால் எனக்கு/எங்களுக்கு ஏதாவது இழப்பு அல்லது தாமதம் ஏற்பட்டால், அத்தகைய இழப்பு அல்லது தாமதத்துக்கு நான்/நாங்கள், ஹெச்எப்எஸ்-ஐ பொறுப்பாக்க மாட்டோம். டி. விண்ணப்பம் மீதான முடிவு, விண்ணப்பம் மற்றும் இதர ஆதார ஆவணங்கள் அனைத்தும் பெறப்பட்டதில் இருந்து அதிகபட்சமாக 30 நாட்களுக்குள் தெரிவிக்கப்படும்.

மிக முக்கியமான விதிகள்

உங்கள் கடன் விண்ணப்பத்துக்கு நன்றி. ஹெச்எப்எஸ் திட்ட சிறப்பம்சங்கள் தெளிவாக உள்ளது என்பதை உறுதிச் செய்ய பின்கூறப்பட்டுள்ளதை படித்து மற்றும் அதை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக கையொப்பமிட உங்களிடம் கேட்கப்படுகிறது. நீங்கள் எதிர்காலத்தில் படித்துப் பார்க்க தயவுச் செய்து இந்த ஆவணத்தின் ஒரு பிரதியை தக்க வையுங்கள்.

1. *வசூலிக்கப்படும் செயலாக்க கட்டணங்கள் திருப்பித் தரப்படாத வகையிலானது.
2. வாங்கிய கடனுக்கு உரித்தாகும் வட்டி விகிதம், தொகை வழங்கப்பட்ட தேதி(களில்) அமலில் உள்ளதாக இருக்கும் மற்றும் நிறுவனத்தின் மதிப்பீட்டின் இதர விஷயங்களுக்கு இடையே வாடிக்கையாளரின் தகுதி, கடனை திருப்பிச் செலுத்தும் தகுதி, அபாய விவரக்குறிப்பு, பாதுகாப்பு, திருப்பிச் செலுத்தும் குறிப்பு பதிவு, வெளிப்புற தரமதிப்புகள் போன்றவை அடிப்படையிலானதாக இருக்கும். நிறுவனம் பின்பற்றும் வட்டி விகித மாதிரி அடிப்படையில் ஒரே திட்டத்துக்கான வட்டி விகிதம் மற்றும் காலம் மேற்கூறப்பட்ட காரணிகளை பொறுத்து வெவ்வேறு வாடிக்கையாளர்களுக்கு வித்தியாசப்படலாம்.
3. இந்த கடிதத்தில் கையொப்பமிடுவதன் மூலம் முன்கூறப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பொருளடக்கத்தை நான்/நாங்கள் படித்து மற்றும் புரிந்துக் கொண்டோம் என்றும், அதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல் அனைத்தும் உண்மையானது மற்றும் சரியானது என நான்/நாங்கள் அறிவித்து உறுதிச் செய்கிறோம் மற்றும் மேற்கொண்டு அதை ஏற்று, ஒப்புக் கொண்டு உறுதிச் செய்கிறோம்.
4. எனது/எங்களது கடன் வரலாற்றை பதிவுச் செய்யப்பட்ட எந்தவொரு கிரெடிட் அமைப்புகளில் இருந்து எடுக்க ஹெச்எப்எஸ்-ஐ நான்/நாங்கள் அனுமதிக்கிறோம்.
5. கடன் காலத்தின் போது எந்த நேரத்திலும் சிகேஒய்சிஆர்-ல் இருந்து எனது/எங்களது பதிவேடுகளை அணுகவும், பதிவிறக்கவும் இதன் மூலம் எனது/எங்களது வெளிப்படையான சம்மதத்தை நான்/நாங்கள் இதன்மூலம் கொடுக்கிறோம்.
6. இந்த விண்ணப்பப் படிவத்தில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் தகவலில் மாற்றம் ஏதாவது இருந்தால் அது பற்றி நான்/நாங்கள் ஹெச்எப்எஸ்-க்கு தெரிவிப்போம் என்றும் நான்/நாங்கள் உறுதியளிக்கிறோம்.

* மேற்கூறப்பட்ட கட்டணங்கள் சம்பந்தப்பட்ட வரிகள், கல்வி வரி மற்றும் இதர அரசாங்க வரிகள், லெவிகள் இன்னபிறவை நீங்கலானது. சம்பந்தப்பட்ட கட்டணங்கள் உரித்தாகும் கட்டண அட்டவணைப்படி வசூலிக்கப்படும். இதை நிறுவனத்தின் இணையதளமான www.hfs.in. என்பதில் பார்க்கலாம்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்	இணை-விண்ணப்பதாரரின் கையொப்பம்	இணை-விண்ணப்பதாரரின் கையொப்பம்
தனிநபர் அல்லாத விண்ணப்பதாரர்/இணை-விண்ணப்பதாரர் எனில், முத்திரை பதித்து கையொப்பமிடவும்	தனிநபர் அல்லாத விண்ணப்பதாரர்/இணை-விண்ணப்பதாரர் எனில், முத்திரை பதித்து கையொப்பமிடவும்	தனிநபர் அல்லாத விண்ணப்பதாரர்/இணை-விண்ணப்பதாரர் எனில், முத்திரை பதித்து கையொப்பமிடவும்
கிளை பெயர்	ஆர்எம் பெயர்	ஆர்எம் குறியீடு

தேதி D D M M Y Y Y Y

கட்டணங்கள் (கட்டணங்கள் அனைத்தும் திருப்பித் தரப்படாது) (உரித்தாகும் வரிகள் அதோடு சேர்த்து)

1. செயலாக்க கட்டணம் (திருப்பித் தரப்படாது): கடன் தொகையில் 4% வரை அல்லது ரூ. 18000/-, எது அதிகமோ அது.	7. இதர ஆவண கட்டணங்கள் ரூ. 500/-.
2. தவணை பவுன்ஸ் கட்டணம்: ஒரு பவுன்சுக்கு ரூ.1000/- வரை	8. முத்திரை வரி மற்றும் இதர சட்டப்பூர்வ கட்டணங்கள்: வரையறுக்கப்பட்டது, மாநில சட்டப்படி பொருந்துவது.
3. வருடாந்திர கணக்கு அறிக்கை/திருப்பிச் செலுத்தும் அட்டவணை/தற்காலிக வரி சான்றிதழ்/எல்ஓடி/முன்முடித்தல் கடிதம்/வரவேற்பு கடிதம் ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒரு வழங்கலுக்கு கிடையாது அதற்கடுத்து/நகல் கோரிக்கைகளுக்கு - ஒரு ஆவணத்துக்கு ரூ. 500/-.	9. கடன் வழங்கியப் பிறகு ஆவண நிபந்தனைகளுக்கு இணங்காதது அல்லது வேறு ஏதாவது முக்கிய விதிகள் அல்லது இங்கே வெளிப்படையாக குறிப்பிடப்படாத உடன்படிக்கையை மீறுவதற்கு அபராத கட்டணங்கள் ஏ. ரூ. 10 லட்சம் வரையிலான கடனுக்கு - கடன் தொகையில் வருடத்துக்கு 1% அதிகபட்சம் ரூ. 10,000/-க்கு உட்பட்டது. பி. ரூ. 10 லட்சத்துக்கு அதிகமான கடனுக்கு - கடன் தொகையில் வருடத்துக்கு 1% அதிகபட்சம் ரூ. 25,000/-க்கு உட்பட்டது.
4. கடன் ரத்து கட்டணங்கள்: ரூ. 5000/- மேலும், கடன் வழங்கிய தேதி மற்றும் கடன் ரத்து தேதிக்கு இடைப்பட்ட காலத்துக்கு வட்டி வசூலிக்கப்படும். பேலன்ஸ் மாற்றுவது பொறுத்த வரை, செலுத்தப்பட்ட செயலாக்க கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படாது).	தாமதமாக பணம் செலுத்தினால் அபராத கட்டணம்: பாக்கி தொகைக்கு ஒரு மாதத்துக்கு 2% என பணம் கட்டாமல் பாக்கி வைத்த நாட்களின் அசல் எண்ணிக்கைப்படி வசூலிக்கப்படும்
5. ஆவணம் மீட்டெடுத்தல் கட்டணங்கள்: மீட்பு ஒன்றுக்கு ரூ. 1000/-.	10. தற்காலிக அறிக்கை வழங்க கட்டணம்: ஒரு ஆவணத்துக்கு ரூ. 500.
6. காசோலை / இன்ஸ்ட்ருமென்ட் (கருவி) மாற்றும் கட்டணங்கள்: ஒரு நிகழ்வுக்கு ரூ. 500/-.	11. முன்கூட்டி பணம் செலுத்தல்/பகுதியாக முன்கூட்டி பணம் செலுத்தல்/முன்முடித்தலுக்கான கட்டணங்கள் மற்றும் உரித்தாகும் நிபந்தனைகள்: ஏ. 12 இஎம்ஐகளை கட்டும் முன்பு முன்கூட்டி பணம் செலுத்த/பகுதியாக முன்கூட்டி பணம் செலுத்த அனுமதிக்கப்படாது. பி. 12 இஎம்ஐகள் கட்டியப் பிறகு முன்கூட்டி பணம் செலுத்தல்/பகுதியாக முன்கூட்டி பணம் செலுத்தலுக்கு. பாக்கி உள்ள அசல் தொகையில்/முன்கூட்டி செலுத்தும் தொகையில் 6% வரை முன்கூட்டி செலுத்தலுக்கான கட்டணமாக வசூலிக்கப்படும். முன்கூட்டி பணம் செலுத்த நிபந்தனை(கள்): *ஒவ்வொரு 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு ஒரு தடவை பாக்கியுள்ள அசல் தொகையில் அதிகபட்சமாக 25% வரை முன்கூட்டி செலுத்த முடியும். சி. மேற்குறிப்பிட்டுள்ளவை நிலையான வட்டி விகிதக் கடன்களுக்குப் பொருந்தும். டி. மேற்குறிப்பிட்டுள்ள விதிமுறைகள், தனிநபர்கள் அல்லது குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு (எம்எஸ்இகள்) வணிக நோக்கத்திற்காக ₹50 லட்சத்திற்கு மேல் வழங்கப்படும் கடன்கள் தவிர்த்து, மாறும் வட்டி விகிதக் கடன்களுக்கு பொருந்தாது.

குறிப்பு: விரிவான கட்டணங்களுக்கு இணையதளம் www.hfs.in. என்பதில் உள்ள கட்டண அட்டவணையை தயவுச் செய்து படிக்கவும்.

வாடிக்கையாளர் ஒப்புகை

HFS | Hiranandani Financial Services

ஹிராநந்தனி ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்கார்பியோ ஹவுஸ், சென்ட்ரல் அவென்யூ, ஹிராநந்தனி பிசினஸ் பார்க், பவாய், மும்பை – 400076 | கார்ப்பொரேட் அலுவலகம்: 9வது தளம், சிக்மா டெக்னாலஜி ஸ்டிரீட், ஹிராநந்தனி கார்டன்ஸ், பவாய், மும்பை - 400076 | மின்னஞ்சல்: wecare@hfs.in | இணையதளம்: www.hfs.in | சிஐஎன்:U65999MH2017PTC291060

உங்கள் கடன் விண்ணப்பம் பெறப்பட்டதற்கு நாங்கள் ஒப்புகை அளிக்கிறோம். விண்ணப்ப எண் (ஐஓஎஸ் ஐடி) ____________ ____________

விண்ணப்பதாரர் பெயர் ____________

ரிலேசன்ஷிப் மேலாளர் பெயர் ____________ தேதி DD MM YYYY

ரிலேசன்ஷிப் மேலாளர் மொபைல் எண் ____________

குறிப்பு:

1. கடன் மதிப்பீடு செய்து முடிவெடுப்பது ஹிராநந்தனி ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் (ஹெச்எப்எஸ்) தனியுரிமை முடிவாகும்.
2. இது விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டதற்கான ஒரு ஒப்புகை மட்டுமே மற்றும் இதை விண்ணப்பத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டதன் ஒரு அடையாளமாக கருதக்கூடாது.
3. விண்ணப்பம் மீதான முடிவு பற்றி, விண்ணப்பம் மற்றும் இதர ஆதார ஆவணங்கள் அனைத்தும் பெறப்பட்ட தேதியில் இருந்து அதிகபட்சமாக 30 நாட்களுக்குள் தெரிவிக்கப்படும். ஏதாவது கேள்விகள் இருந்தால், தயவுச் செய்து எங்களுக்கு இதில் எழுதி அனுப்பவும் wecare@hfs.in